1971 டிசம்பர் 13]

கரிமிபேடு கிராமத்தில் அணை

* 329 வினா—திரு. இ. எஸ். தியாகராஜன் : மாண்புமிகு பொதுபணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு துணை வட்டத்தில் கரிம்பேடு கிராமத்தில் அகடகொட்ட—தலாரி குட்ட எனும் இடத்தில் அணைக்கட்டு ஒன்றுக்காக எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்த வேலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இத்திட்டம் உள்ளூர் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

(இ) பரிசீலனைக்குப்பின் தகுந்த அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று இத்திட்டம் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பரமக்குடி—கீரந்தை சாலை

* 330 வினா—திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவங்கை நெடுஞ்சாலை கோட்டம், பரமக்குடி—கீரந்தை சாலையில் கல் பரப்பும் வேலை அரசாங்க பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்றால். எப்பொழுது செயல்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) பரமக்குடி—கீரந்தை சாலையை (மைல் 0/0—16/2) சீர்படுத்தும் (கல்பரப்புதல் உட்பட) வேலைக்கு அரசு, ரூ. 12.50 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது.

(இ) இவ்வேலை இந்த நிதியாண்டில் (1971-72) எடுத்துக் கொள்ளப்படும்.

பெண்ணாகடம் அருகில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம்

* 331 வினா—திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தையும், தென்னார்க்காடு மாவட்டத்தையும் இணைக்கும் வகையில் பெண்ணாகடம் அருகில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.